# தாவரத்தின் பாகங்கள்

தாவரங்களின் பாகங்கள் வேர்கள், தண்டுகள், இலைகள், கிளைகள், பூக்கள், காய்கள், கனிகள், ஆகியவை ஆகும்.







தாவரங்களில் புல், செடி, கொடி, மரங்கள் அடங்கும். தாவரங்களை வீட்டில் வளர்ப்பதால், நிழல்தருவதுடன் உடலுக்கு ஆரோக்கியமும் அளிக்கிறது.










வேர்கள் தாவரத்தின் முக்கிய பகுதி ஆகும். சில தாவரத்தின் வேர்கள் அதிக நிலப்பரப்பில் பரவி தாவரம் பூமியில் நிலைத்து நிற்பதற்கு ஆதாரமாக விளங்குகிறது, (எ கா) மரங்கள்.



மரம்

ஒரு சில தாவரம் அதற்கு தேவையான உணவுகளை அதன் வேர் பகுதிகளில் இருந்து பெறுகின்றது. சில தாவரத்தின் வேர்கள் உணவாக பயன்படுகிறது. (எ.கா) கேரட், செங்கிழங்கு, முள்ளங்கி ஆகியவை ஆகும்.



கேரட்



செங்கிழங்கு



முள்ளங்கி

தாவரத்தின் தண்டு பகுதி, தாவரம் உறுதியாக வளர உதவுகின்றன. தாவரத்தின் தண்டுகள் செடிகளில் மிருதுவாகவும், மரங்களில் உறுதி தன்மை கொண்டதாகவும் இருக்கும். சில தாவரத்தின் தண்டு பகுதி உணவிற்கும் பயன்படும், (எகா)வாழைத்தண்டு.



மரக்கட்டை




வாழைத்தண்டு

தாவரத்தின் கிளைகள் தண்டு பகுதியுடன் இணைந்திருக்கும். கிளைகள் மேற்பகுதியில் காணப்படும் இலை, பூ, கனி ஆகியவற்றிற்கு தேவையான ஊட்டத்தை கொண்டு செல்ல உதவுகிறது.



தாவரத்தின் இலைகளில் உள்ள பச்சையத்தின் காரணமாக இலைகள் பச்சை நிறத்தில் இருக்கின்றன. தாவரத்தின் இலைக்ள் பொதுவாக நீளமாகவும், அகலமாகவும் காணப்படுகிறது.









# இலைகள்

சூரியனின் ஒளியை பெரும் இலைகள் பருவ காலத்திற்கு ஏற்ப மாறுபட்டு காணப்படும்.









பூக்கள் பல்வேறு அமைப்பிலும் வடிவத்திலும் நிறத்திலும் மாறுபட்டு காணப்படுகின்றது. பறவைகள், பூச்சிகள் அவற்றிற்கு பூக்களின் பலவண்ணமும், மணமும் அவற்றை ஈர்க்கின்றது.





# பூக்கள்

சில தாவரங்களில் இருந்து கிடைக்கும் பழங்கள் பெரும்பாலும் இனிப்பு சுவையுடையதாகவே இருக்கும். பழங்களில் உள்ள சத்துக்களினால் நமக்கு தேவையான ஆற்றல் கிடைக்கின்றன.



# பழங்கள்

பழங்களில் உள்ள இனிப்பு சுவையினால் விலங்கு, பறவைகளும் பழங்களை விரும்பி உண்ணுகின்றன. பழங்களில் உள்ள விதைகள் ஒரு புதிய தாவரம் தோன்றுவதற்கு முக்கிய காரணமாகும்.

